# Valvai Nalanpuri Sangam
## by Thamilnee Pon Sivakumaran

## வல்வெட்டித்துறை நலன்புரிச்சங்கங்கள்!........

"தமிழ்நீ".பொன்.சிவகுமாரன்
(23.05.2010)

வல்வெட்டித்துறையின் வரலாற்றில் சங்கங்களின் சேவையானது அளப்பரியதும் தொடரானதுமாகும். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களில் இயங்கினாலும் இச்சங்கங்கள் தாம் எடுத்துக் கொண்ட நோக்கத்தினை செயற்படுத்த முனைந்துள்ளமை போற்றுதற்குரியதாகும். வரலாற்றை தொடர்ந்து படைக்கும் வல்வெட்டித்துறையில் காலத்தின் தேவைகளிற்கு ஏற்ப சங்கங்களும் தமது வரலாற்றுப் பிறப்பை எடுத்து வந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கிணங்க புதியபுதிய பெயர்களில் இச்சங்கங்கள் தோன்றியிருந்தாலும் அவற்றின் நோக்கம் ஒன்றாகவே இருந்துள்ளது. வல்வைத்தாயினதும் அதன்மக்களதும் நலனையும் வளர்சியையும் கருதியதாகவே அவை இயங்கியுள்ளன. இதனால் இவைகள்யாவும் வல்வையின் "நலன்புரிச்சங்கங்கள்" ஆகின்றன.

**வல்வெட்டித்துறை "வேலையற்றோர் நிவாரணச்சங்கம்"' :---**

எமது அறிவிற்கு எட்டிய வகையில் பதிவிற்கு உள்ளாக்கப்பட்டு இன்னும் அடையாளம் காணக்கூடியவாறு காணப்படும் முதலாவது சங்கம் இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன்பு வல்வையில் இயங்கிய வலவெட்டித்துறையின் வேலையற்றோர் நிவாரணச்சங்கம். (VALVATTITHURAI UNEMPIOYMENT RELIEF ASSOCIATION) ஆகும். இலங்கையின் சுதந்திரத்திற்கு பத்து வருடங்களுக்கு முன்பாகவே ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இயங்கியது இச்சங்கம் ஆகும். வல்வட்டித்துறையில் வேலையற்றிருந்த கப்பல் தொழிலாளர்கள். துறைமுகத் தொழிலாளர்கள். மற்றும் கடற்தொழிலாளர். என்பவர்களிற்காகவே இது அமைக்கப்பட்டிருந்தது. வறுமையில் வாடிய இத்தொழிலாளர்களின் நல்வாழ்விற்காக ஆங்கிலேய அரசிடம் பல திட்டங்களை முன் வைத்தும் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தியதும் இச்சங்கமேயாகும். இச்சங்கத்தின் கௌரவ செயலாளராக இருந்து அதனை இயக்கியவர் வே.வ.சிவப்பிரகாசம் ஆவார்கள். வல்வட்டித்துறையின் வரலாற்றில் நீக்கமற நிறைந்திருக்கும் முத்துமாரியம்மன் கோவில் வரலாற்றினை முதன் முதல் 1963ம் ஆண்டில் எழுத்துருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். 1939ம் ஆண்டில் இவரைச்சுட்டி வல்வட்டித்துறை வேலையற்றோர் நிவாரணச்சங்கத்திற்கு கொழும்பில் இருந்த அமெரிக்க கவுன்சிலர் எழுதிய கடிதத்தை "வரலாற்றில் வல்வட்டித்துறை" நூலில் 140ம் பக்கத்தில் நீங்கள் காணலாம். இப்புத்தகம் பா.மீனாட்சிசுந்தரம் என்பவரால் எழுதப்பட்டது.

**வல்வெட்டித்துறை "வல்வை சேவாசங்கம்"** :---

இரண்டாம் உலகமாக யுத்தத்தின் பின் வல்வட்டித்துறை மக்களின் நலம்பேண அமைக்கப்பட்ட சங்கமே "வல்வை சேவா சங்கம்" (VALVAI SEVA SANGAM) ஆகும். இரண்டாம் உலகமகா யுத்தத்தினால் வல்வெட்டித்துறையின் கப்பல் தொழிலாளர்கள் சந்தித்தபெரும் பின்னடைவும் அதனால் அவர்களிற்கு எற்ப்பட்ட பொருளாதார இழப்பிற்குமான தீர்வை முன்வைக்காமல் சுதந்திர இலங்கையின் உணவுத்தேவையினை அவர்களைக் கொண்டே தற்காலிகமாக தீர்க்க முற்பட்டது இலங்கை அரசு. குறிப்பிட்ட காலத்தின் பின் வல்வைக் கடலோடிகளின் அந்த முயற்சியை சட்டவிரோதமானது எனக் கூறி தடுக்கமுற்ப்பட்டது. வல்வெட்டித்துறை மக்களிற்கும் அரசபடைகளுக்குமான முறுகல் நிலை இவ்வாறுதான் ஆரம்பித்தது. 1948,1949,1950 எனத்தொடர்ந்த இக்காலப்பகுதியில் வல்வை மக்களின் நலன் பேணிய சங்கமாக இது காணப்படுகிறது. இச்சேவாசங்கத்தினர். இரண்டாம் உலகமாக யுத்தத்துடன் நின்றுபோன பாய்க்கப்பல் தொழிலுக்கு மாற்றான தொழில்களை வல்வை மக்களிற்கு அறிமுகப்படுத்தியும் அன்றைய பிரதமர் D.S செனநாயக்காவுடன் சந்திப்பை மேற்கொண்டும் பிரச்சனைக்கு உரிய தீர்வைத்தேடுவதில் இவர்களே முன் நின்றனர். 1950இல் கடற்படையினருடனான மோதலில் சுந்தரம் சண்முகம் என்ற இளைஞர் கொல்லப்பட்டு வைரமுத்து சுந்தரமூர்த்தி என்ற இளைஞர் படுகாயப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வல்வெட்டித்துறையில் பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இவர்களின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை பட்டினசபையில் கூடிய கலந்துரையாடல் ஒன்றில் அன்றைய பொலிஸ்மாஅதிபரான "றிச்சேட்அலுவிகார" மற்றும் யாழ்ப்பாண பொலிஸ்அதிபரான "சிட்னி டி சொய்சா" என்பவர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் உரையாற்றிய இவ்விருவருமே தன்னிச்சையாக வல்வட்டித்துறைக் கடலோடிகள் கொண்டுவரும் அரிசி போன்ற உணவுப் பொருட்களை தடுப்பதில் நாம் ஆர்வம் காட்டவில்லை எனக்கூறி அன்றைய அரசாங்கத்தின் நிலையை வெளிப்படுத்தினர். இம் மகாநாட்டினைத் தொடர்ந்து வல்வெட்டித்துறையின் பல கப்பலோட்டிகளும் கொழும்புத் துறைமுகத்தில் டக்மாஸ்டர் ஆகவும் வேறு பல பதவிகளையும் பெற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1951ம் ஆண்டில் இச்சங்கத்தினால் வெளியிடப்பட்டது RE . OPENING OF NORTH – CEYLON PORT என்னும் நூலர்கும். வலவெட்டித்துறை துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றியும் வலவெட்டித்துறை கடலோடிகளின் அதீத திறமையையும் விதந்துரைப்பதே இந்நூலகும். இச்சங்கத்தின் கௌரவசெயலாளராக பணியாற்றி மேற்படிநூலை எழுதியவர் பூ.க.முத்துக்குமாரசாமி ஆசிரியர் அவர்களாவர். இச்சங்கத்தின் கொழும்புக்கிளை பொறுப்பாளராக கடமையாற்றி அரசியல்தலைவர்களுடனும அரசஅதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தவர் P.முத்துலிங்கசாமி என்னும் பெரியாராவார்.

**வல்வெட்டித்துறை "தூக்குத்தெழிலாளர் சங்கம":---**

வல்வெட்டித்துறை தூக்குத்தொழிலாளர் சங்கம் இது கொத்தியால் துறைமுகத்தொழிலாளர் சங்கம். எனவும் அழைக்கப்பட்டது. காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்களிற்கு வரும் கப்பல்களில் இருந்து பொருட்களை இறக்கும் வல்வைத்தொழிலாளர்களின் நலனிற்காக ஆரம்பிக்கப்பட்டது இச்சங்கமாகும். மேற்படித் துறைமுகங்களின் தேவைகளிற்கேற்ப தொழிலாளர்களை ஒழுங்கமைத்து கொடுப்பதில் முன்னின்றது. அத்துடன் வேம்படியில் ஒரு வாசகர் படிப்பகத்தை நிறுவி இளையவர்களின் பொது அறிவுத்திறனையும் வளர்த்த வந்தது. இவ்வாசகர் படிப்பகத்தின் வளர்ச்சியே பின் வந்த கணபதி படிப்பகமாகும். இவ்வாறு கணபதி படிப்பகத்தை 1967ம் ஆண்டில் அமைப்பதற்காக மேற்கூறிய தொழிலாளர்களிடம். இருந்து "அமைஞ்சி" மூலம் இவர்களால் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

"அமைஞ்சி" எனப்படுவது வல்வட்டித்துறையின் வரலாற்றுடன் இணைந்து வரும் பொதுநலத்திற்காக நிதி சேகரிக்கும் ஒரு நன்கெடைத் திட்டமாகும். ஆரம்ப கலங்களில் கப்பல் தொழிலாளர்களிடம் கடற்தொழிலாளர்களிடமும் குறிப்பிட்ட நாளில் பெறப்படும் வருமானத்தில் அன்றைய தொழிலிற்கான செலவைக் கழித்து மிகுதியை நன்கெடையாக பெற்றுக் கொள்வதாகும். இவ்வாறு பெறப்படும் நிதியில் இருந்து குறிப்பிட்ட பொதுத்தேவையை நிறைவு செய்வதாகும். இச்சங்கத்தை முன்னின்று செயற்படுத்தியவர்களாக பொன்னண்ணா என அழைக்கப்பட்ட பொன்னம்பலமும் செயல்வீரனாக போற்றப்பட்ட காலஞ்சென்ற இலட்சுமிகாந்தனும் குறிப்பிடத்தக்கவர்கள்.

**வல்வெட்டித்துறை "கடற்றொழிலாளர்" சங்கம்:---**

ஆதிமனிதன் உணவப்பயிற்களை பயிரிடுவதற்கு முன்பாக பழங்களைபறித்துண்ணல். வேட்டையாடுதல் எனத்தன்னுடைய உணவுத்தேவையினை எதிர்கொண்டான். இவற்றிற்கு இணையாக மீன்பிடிக்கவும் முயன்றான். குளங்களிலும் குட்டைகளிலும் ஆற்றங்கரைகளிலும் மற்றும் கடற்கரைகளிலும் கைகளாலும் கூர்தடிகளினால் குத்தியும் மீனைப்பிடிக்க முயன்றான். இவ்வகையில் ஒருமண்ணின் பூர்வீகக்குடியினர் மீனவர்களாகவே இருப்பர். என சீனிவாசஜயங்கார் முதல் ஜேம்ஸ் ஆர்னலின் போன்ற சமூகஆராய்சியாளார் கருதுகின்றனர். இலங்கையின் பூர்வீகக்குடிகளான நாகர் இனத்துடன் மீனவரும் அடையாளப்படுவதாக சீனிவாசஜயங்காரின் கூற்றுகாணப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

பெருமைமிகு கடலோரநகராக விளங்கும் வல்வெட்டித்துறையில் நீண்டகாலமாக இயங்கிவருவது கடற்றொழிலாளர் சங்கமாகும். கடற்றொழில் என்பது பொதுவாக மீன்பிடித்தல் எனஅழைக்கப்பட்டாலும் கடலிலும் கடலுடன் இணைந்தும் செய்யப்படும் தொழில்களும் கடற்றொழில் வகையைச் சார்ந்தவையே. மீன்பிடிக்கும் வள்ளங்கள், படகுகள், கட்டுமரங்கள், றோலர்கள் என்பவற்றுடன் கரைவலை, வீச்சுவலை, தூண்டில், மீன்கூடு என மீன்பிடித்தலும் பலவகைப்படும். இதனைவிட மீனைப்பதப்படுத்தல், கருவாடுபோடுதல்,

விற்பனைசெய்தல் என கடற்றொழிலாளரின் வினைத்திறன் பலவகையில் தொழிற்படுகின்றது. இக்காலங்களில் மீனவருக்கு ஏற்படும் பலவேறு பிரச்சனைகளிற்கும் தீர்வுகாணும் முயற்சியில் அமைக்கப்பட்டவையே கடற்றொழிலாளர் சங்கங்களாகும். இச்சங்களில் செயற்படுவோர் கடற்றொழிலாளரின் பிரச்சனைகளை நன்குவிளங்கிய கடற்றொழிலாளர்களிடம் இருந்தே தெரிவுசெய்யப்படடனர். இவர்கள் தம்மால் தீர்க்கமுடியாத பிரச்சனைகளை தமக்கு முதல்நிலையில் உள்ள சமாயம் மற்றும் பிரதேச மாவட்ட மட்டங்களிலும் பேசித்தீர்ப்பர். அத்துடன் கடற்றொழிலாளரான மீனவர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கான வாழ்விடம் மற்றும் கல்விவளர்சியுடன் அவர்களிற்கான கடன்கள் நிவாரணங்கள் என்பவற்றை பெற்றுக்கொடுப்பதிலும் இச்சங்கங்களே என்றும் முன்நிற்கின்றன. வல்வெட்டித்துறையின் இருகடற்றொழிலாளர் சங்கங்களின் வரலாற்றில் சுந்தரலிங்கம் மற்றும் வைத்தியண்ணா (நடராசாவைத்திலிங்கம்) என்போர் பெயர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு:----

பல்வேறுசங்கங்களின் செயற்திறனுடன் வளர்ந்துவந்த வல்வெட்டித்துறை 1983இன் பின்பாகபாரிய பிரச்சனைகளை சந்தித்தது. பொருளாதார முன்னேற்றத்தையும் சமூகவிழிற்புணர்வையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கிய வல்வெட்டித்துறை சங்கங்களின் வரலாற்றில் இருப்பதைக்காப்பாற்றவும் நடப்பதை பதிவுசெய்யவும் ஒருகுழு தேவைப்பட்டது. வளர்ந்து வந்த விடுதலைப்போரின் விதையாக வல்வெட்டித்துறை விளங்கியநிலையில் பலஎதிர் விளைவுகளையும் சந்தித்தது. இந்நிலையில் 5.8.1984 இல் வல்வைமண் மோதல்களின் களமாகி பலவிபரீதவிளைவுகளை எதிர்கொண்டது. போர்க்காலங்களில் திடீர்திடீரென ஏற்படும் இதுபோன்ற விளைவுகளை தடுக்கமுடியாத போதும் விளைவுகளின் தாக்கத்தையும் அதனால் ஏற்படும் மக்களின் இழப்பையும் வேதனையையும் வெளிப்படுத்தும் முகமாக வல்வெட்டித்துறையில் உருவாக்கப்பட்டதே வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவாகும். போர்கால சூழ்நிலையில் மக்களிற்காக மக்களால் முதலாவதாக உருவாக்கப்பட்ட இக்குழுவின் வழிகாட்டலைத் தொடாந்து பல ஊர்களிலும் பிரஜைகள் குழுக்கள் உருவாகின. வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் ஸ்தாபகதலைவராக விளங்கியவர் "பேராசிரியர்" கார்திகேசு சிவத்தம்பியாவார். தொடர்ந்த நாட்களில் யாழ் மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவராகவும் சமகாலத்தில் இவரே கடமையாற்றினார்.

வல்வைபிரஜைகள் குழுத்தலைவராக அரசபடைகளின அத்துமீறல்களைகளையும் பொதுமக்களின் கையறு நிலையையும் கண்காணித்த இவர் அக்காலத்தில் ஏற்பட்ட போர்நிறுத்த கண்காணிப்பு குழுவின் மூத்தஉறுப்பினராகவும் செயல்ப்பட்டார். சந்தேகங்களும் மிரட்டல்களும் வன்முறைகளும் தலைவிரித்தாடிய நிலையிலும் 1995ம ஆண்டுவரை சேவைபுரிந்த வல்வை பிரஜைகள் குழுவின் சேவை என்றும் பாராட்டப்படவேண்டியதாகும். இந்திய இராணுவ காலத்தில் மேற்படி பிரஜைகள் குழுவின் சேவை மிகவும் வேண்டப்பட்டதாயிருந்தது.

**வல்வை நலன்புரிச்சங்கம் இலண்டன்:----**

1982இன் பின் தாயகத்தில் இருந்து சிறப்புக்கல்வியை மேற்கொள்ள அயர்லாந்து வழியாக இலண்டன் வந்த இளம்வல்வையர்களும் ஏற்கெனவே இலண்டனில் வாழ்ந்த வல்வெட்டித்துறை மக்களிற்கும் இணைப்பை உருவாக்கும் முயற்சியில் இலண்டனில் உருவானதே இலண்டன் வல்வை நலன்புரிச்சங்கமாகும். 1986ம் ஆண்டு இத்தகைய இணைப்பு முயற்சியில் முன்நின்ற வல்வை நலன்விரும்பிகள் சபாரத்தினம் சுரேந்திரன், சாம்பமூர்தி அம்பலவாணர், பிறேமதாஸ் காத்தாமுத்து, உருத்திராபதி சேகர். துரைராசா முகுந்தராஜ். இராமச்சந்திரன் அலன், விவேகானந்தர் கண்ணன், வல்லிபுரம் நடேஸ், பொன்னம்பலம் ஜீவன் மற்றும் நண்பர்களாவர். இங்கிலாந்தின் பலபகுதிகளிலும் வாழ்ந்த வல்வையர்களை ஒன்றிணைத்து ஆரம்பஅடிகளை எடுத்து வைத்தது இச்சங்கமாகும். இத்தகைய இணைப்பே 1989இல் இந்திய இராணுவ வல்லாதிக்க காலத்திலும் அதன்பின்பும் வல்வெட்டித்துறை மக்கள் கணிசமாக இலண்டனில் குடியேறியபோது அம்மக்களனைவரின் தொடர்பிற்கும் தாய்நில வல்வையின் தேவைகட்கு தோள்கோடுக்கும் வல்வை நலன்புரிச்சங்கத்தின் செயற்பாடுகளிற்கும் வழிகோலியது.

கடந்தகாலங்களில் வல்வை ஒன்றியம், உலகவல்வையர் ஒன்றியம், வல்வை தேசியப்பேரவை என வெவ்வேறு பெயர் மாற்றங்களிற்கு ஆட்பட்டபோதும் இன்று மீண்டும் இலண்டனில் ''வல்வை நலன்புரிச்சங்கம்'' என்றபெயரில் சிறப்பாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் வல்வெட்டித்துறையின் நலனை நோக்கிய சங்கங்கள் யாவுமே ஆரம்பத்தில் வல்வை நலன்புரிச்சங்கங்கள் என்ற பெயரிலேயே உருவாகியுள்ளமை கவனிக்கத்தக்கது. இவ்வகையில் புலம்பெயர்ந்த வல்வைமக்களின் நலன்புரிச்சங்கங்களிற்கு முன்னோடிச்சங்கமான பெருமையை இலண்டனில் இயங்கும் இந்த ''வல்வை நலன்புரிச்சங்கம்'' பெறுகின்றது.

**வல்வை நலன்புரிச்சங்கம் கனடா:-----**

புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் வல்வை மக்களினால் தாய் நிலத்தில் வாழும் எம்மக்களின் நலங்களுக்கு உதவுமுகமாக அமைக்கப்பட்ட சங்கமே வல்வெட்டித்துறை நலன்புரிச்சங்கமாகும் இவ்வகையில் கனடாவில் 1990ம் ஆண்டு வசந்த காலத்தில் உருவாக்கப்பட்ட இச்சங்கமே முதலாவது ஊர்ச்சங்கமாகவும் ஏனைய ஊர்ச்சங்கங்களுக்கு வழிகாட்டிய முன்னோடிச்சங்கமான சிறப்பினைப் பெற்றுள்ளது. 1989ம் ஆண்டு ஆவணி மாதம் இரண்டாம் திகதி (2.8.1989) இந்திய இராணுவத்தின் மிலேச்சத்தனமான தாக்குதலினால் வல்வெட்டித்துறை மாநகரம் வரலாற்றில் என்றும் காணாத பாரிய அழிவைச் சந்தித்தது.

இத்தாக்குதலில் 63 அப்பாவிமக்கள் உயிரிழந்ததுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அத்துடன் 134 வீடுகளும் 46கடைகளும் முழுதாக எரித்து அழிக்கப்பட்டது. இவைகளினூடாக பல கோடி ரூபாக்கள் பெறுமதியான சேதங்களைத் தாங்கியவாறு வல்வெட்டித்துறை நகரம் பொலிவிழந்தது. இந்நிலையில் தாய் மண்ணின் துயர்துடைக்கும் முயற்சியில் புலம் பெயர்ந்து கனடா மண்ணில் வாழும் வல்வைமக்கள் 9250 கனேடிய டொலர்களை 1989

ஐப்பசி மாதத்தில் முதன் முதலாக அனுப்பி வைத்தனர். திருவாளர்கள் கலிங்கராஜன், ஜெயச்சந்திரன், குகேந்திரன் என்பவர்களின் தனிப்பட்ட தன்னார்வத் தொண்டினால். தாய் மண்ணின் துயர் துடைக்கும் இம்முயற்சி ஆரம்பித்த வைக்கப்பட்டது என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இதனைத் தொடர்ந்து 1990ம் ஆண்டின் நடுப்பகுதியில் திரு பரஞ்சோதி செந்தில், திரு சிவசுப்பிரமணியம் இரட்ணேஸ்வரன் என்பவர்களின் சிந்தனையில் உதித்த "ஊருக்கென ஒரு சங்கம்'' என்னும் உணர்வு kipling இல் 317ஆம் அறையில் இருந்து பொன்.சிவகுமாரனால் செயலூக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டு Toronto வின் ஊர்உணர்வு கொண்ட வல்வட்டித்துறை மக்களிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. குறிப்பிட்டநாளில் kipling park இல் எல்லோரும் ஒன்றுகூடி ஆராய்ந்த பின்னர் வல்வெட்டித்துறையின் நலன்பேண ஒருசங்கம் அமைப்பதென் முடிவெடுக்கப்பட்டது அத்துடன் திருசெல்வவடிவேல் பொன்னுச்சாமி தலமையில் ஒரு தற்காலிக குழு அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 26.08 1990 அன்று WEST HUMBER கல்லூரியின் மைதானத்தில் ஏறக்குறைய 150 வல்வைமக்களின் முன்னிலையில் சங்கத்தின் அங்குரார்பணக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திலேயே 'வலவெட்டித்துறை நலன்புரிச்சங்கம்' கனடாவில் தனது வரலாற்றுப்பிறப்பை எடுத்தது. இச்சங்கத்தின் முதலாவது தலைவராக திரு ஜவர்கலால்நேருவும் இணைச்செயலாளராக திரு. செல்வவடிவேல் பொன்னுச்சாமியும் மற்றும் திரு. கனகமனேகரன் அவர்களும் தெரிவு செய்யப்பட பொருளாளராக திரு சிவசுப்பிரமணியம் இரட்ணேஸ்வரன் (ரமேஸ்) உட்பட 13 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதுடன் இச்சங்கம் தனது வரலாற்றுக்கடமையை தொடங்கியது.,

### வல்வை நலன்புரிச்சங்கம் டென்மார்க்:-----

இலண்டன். கனடா, என புலம்பெயர்ந்த மண்ணில் உருவாகிய வல்வை நலன்புரிச்சங்கங்களை தொடர்ந்து உருவாகியதே டென்மார்க் வல்வெட்டித்துறை நலன்புரிச்சங்கமாகும். டென்மார்க்கின் பலபகுதிகளிலும் வாழ்ந்த வல்வெட்டித்துறை மக்கள் 26.12.1990 ஹொலஸ்வுரோ(holstebro) நகரத்தில் ஒன்றுகூடி இச்சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்துவைத்தனர்.

அன்று முதல் தாயகம் நோக்கிய தனது பயணத்தை டென்மார்க் நாட்டில் இச்சங்கமே தொர்டங்கிவைத்தது. சமூகஉணர்வுடன் இப்பயணத்தை டென்மார்க் நாட்டில் முன்னின்று தொடக்கி வைத்தவாகளில் ச.சரவணமுத்து, த.ஜீவகன், தங்கக்கட்டி தெ.சங்கர், இ.மகேசன், அ.பாலகிருஸ்ணன், வ.தெய்வேந்திரன் மற்றும் நண்பர்களாவர். சமூகஉணர்வினை தேசியத்தின் துணையாக கருதாமல் விரோதமாக கருதியவர்களின் பலமான எதிர்ப்புகளின் மத்தியிலேயே இச்சங்கம் உருவானமை இங்கு குறிப்பிடத்தக்கது. இசசங்கத்தின் மறுஉருவே இன்றைய டென்மார்க் வல்வை ஒன்றியமாகும்.

### வல்வை மக்கள்சங்கம் மொன்றியல்:--

1996ம் ஆண்டு மொன்றியல் திருமுருகன் கோவில் தீர்த்தோர்ச்சவத்தை வல்வெட்டித்துறை முத்துமாரியம்மனின் இந்திரவிழா போல் நடத்த முற்ப்பட்ட இளைஞர்களான சத்திவேல்கபாலீஸ்வரன்

உம்பர்குலசாமிபார்த்தீபன், செல்லக்கண்டுமுரளிதரன் என்பவர்களின் முன்முயற்சியில் பிறந்ததே வல்வை மக்கள் சங்கமாகும். திருவிழா செய்யும் உத்தேசத்துடன் ஒன்றுகூடிய வல்வைமக்கள் தமக்கென ஒருசங்கத்தையும் உருவாக்கிக்கொண்டனர். அன்று முதல் இன்றுவரை தாம் பொறுப்பேற்ற திருவிழாவை வல்வெட்டித்துறைக்குரிய தெய்வீக கலையம்சத்துடன் நடத்திவருகின்றனர். அதேசமயம் தாய்நிலவல்வைக்கானதமது பங்களிப்பை எவ்விதபங்கமுமின்றி தொடர்சியாக செய்துவருகின்றனர். மொன்றியல் செலவுகள், தாய்நிலவல்வைக்கான சமூகச்செலவுகள், தேசியச்செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகப்பிரித்து எவ்விதகுழப்பமுமின்றி வெகுநேர்த்தியான நிதிப்பங்கிடலுடன் இச்சங்கம் சிறப்புடன் இயங்கிவருகின்றது இச்சங்கத்தின் சிறப்புகளில் குறிப்பிடக்கூடிய அம்சம் யாதெனில் மொன்றியல்வாழ் வல்வைமக்களனைவரும் எவ்வித கருத்து வேறுபாடுமின்றி இச்சங்கத்தில் இணைந்து செயற்படுவதாகும். சங்கத்தினால் மக்களிடையே பெற்றுக்கொள்ளப்படும் மாதாந்த சந்தாப்பணம் முழுமையாக வல்வெட்டித்துறைக்கே அனுப்பிவைக்கப்படும். அப்பணத்தில் இருந்து சிறுதொகையேனும் வேறுதேவைகளிற்காக செலவுசெய்யப்படுவதில்லை என்பது மக்களின் ஏகோபித்த தீர்ப்பாகவும் சங்கத்தின் உறுதியான செயற்பாடாகவும் காணப்படுகின்றது

1990ம் ஆண்டு ரொரன்றேவில் உருவாகிய வல்வை நலன்புரிச்சங்கம் போன்று மொன்றியலிலும் வல்வெட்டித்துறை நலன்புரிச்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. குமாரசாமி நெப்பொலியனை தலைவராகக் கொண்ட மேற்படிசங்கமானது சிலகாலங்களின் பின்மங்கி மறைந்து போனமை இங்கு நினைவூட்டத்தக்கது. எனினும் வல்வை மக்கள்சங்கத்திற்கு முன்னோடிச்சங்கமாக இது தோற்றம் பெற்றுள்ளமையை கூறமுடியும்.

### வல்வை நலன்புரிச்சங்கம் அவுஸ்ரேலியா:---

1999 தைமாதம் மூன்றாம் நாள் அவுஸ்ரேலியாவில் வல்வை நலன்புரிச்சங்கம் தனது பயணத்தை ஆரம்பித்தது திரு.நா.நாகேந்திரனுடைய வீட்டில் ஒன்றுகூடிய வல்வைமக்களினால் மேற்கூறிய நாளில் இச்சங்கம் தனது முதலாவதுஅடியை எடுத்து வைத்தது
உலகத்தின் தென்கோடியில் அமைந்திருக்கும் அவுஸ்ரேலியா மிகவும் வளமுடையது. ஒருநாடே ஒருகண்டமாகவும் ஒருகண்டமே ஒருநாடாகவும் விளங்கும் அற்புதம் படைத்தது உலகத்தில் இந்நாடேயாகும். பிரிட்டனின் காலனித்துவ நாடாய்யிருந்த இந்நாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்டோரும் நாடுகடத்தப்பட்ட கைதிகளுமே குடியேற்றப்பட்தாக கூறுவார்கள். ஆனால் இன்று தெரிந்தெடுக்கப்பட்ட குடியேற்றக்காரர்களே இந்நாட்டில் அனுமதிக்கப்படுவதுண்டு. இதனால் சட்டமும் ஒழுங்கும் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் முதன்மையான நாடுகளில் அவஸ்ரேலியாவும் குறிப்பிடப்படுகின்றது.

ஐரோப்பாவிலும் கனடாவிலும் குடியேறிய வல்வைமக்கள் இறுதியாக அவுஸ்ரேலியாவிலும் குடியேற ஆரம்பித்தனர். புவியியல் ரீதியில் தனித்துவிடப்பட்ட நாடாகவும் அங்கு செல்வதற்கான பாதைகளும் அரிதாய் இருப்பதனாலும் குடிவரவுச்சட்டங்களின் இறுக்கமான நடைமுறைகளினாலும் ஐரோப்பா மற்றும் கனடா போல் பெருமளவு எம்மவர்களால் அங்கு குடியேறமுடியவில்லை. எனினும் ஏனைய நாடுகளில் வாழும் வல்வையர்கள்போலவே அவுஸரேலியாவில் வாழும்

வல்வையர்களும் சமூகஉணர்வுடன் வல்வெட்டித்துறையின் நலனைநோக்கிய வல்வை நலன்புரிச்சங்கத்தை உருவாக்கி வல்வைக்கான தமது பங்களிப்பை மிகநேர்தியாக செய்துவருகின்றனர்.

"ஊரும் நாடும் எம்மிரு கண்கள்" என்பதை தாரகமந்திரமாக கொண்டு குறுகியகாலதில் இவர்களாற்றிய பணிகள் பலபல. இச்சங்கத்தின் ஆரம்பபணிகளினை முன்னெடுத்த தலைவர் இ.தனபாலசிங்கம், உபதலைவரான பாலசிங்கம் மாணிக்கவாசகர் செயலாளரான விக்டர்தணிநாயகம் பொருளாளரான சாம்பசிவம் ஜெயக்குமாரும் இவர்களுடன் இணைந்து செயலாற்றிய நாகமுத்து நாகேந்திரன் மற்றும்அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் என்றும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களால் வெளியிடப்பட்ட "வல்வெட்டித்துறை நலன்புரிச்சங்கம் நடந்துவந்த பாதையில்" என்னும் கையேட்டில் இச்சங்கத்தின் வரலாற்றுக்குறிப்புகளை நாம் காணலாம்.

**வல்வை நலன்புரிச்சங்கம் சுவிஸ்சலாந்து:---**

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்த வல்வையர்களினால் உருவாக்கப்பட்ட வல்வைநலன்புரிச்சங்கங்கள் போல சுவிஸ்சில் வாழ்ந்த வல்வையர்களினால் "மிலேனியம்" ஆண்டான 2000 ஆணடில் வலவெட்டித்துறை நலன்புரிச்சங்கம் உருவாக்கப்பட்டது. 05.04.2003இல் சுவிஸ்லாந்து வல்வை ஒன்றியம் உருவாக்கப்பட்டது. வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் பழையமாணவர்சங்கங்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப 2000ம் ஆண்டில் புலம்பெயர்ந்த நாடுகளில் கல்லூரிக்கான நிதிசேகரிப்பு புதியவீச்சுடன் ஆரம்பமாயிற்று. இத்தகைய நன்முயற்சியை முன்னெடுக்கமுயன்ற சமூகஉணர்வாளர்கள் தமது நீண்டநாள் கனவான வல்வை நலன்புரிச்சங்கத்தை உருவாக்கி அதன் ஊடாக சிதம்பராக்கல்லூரிக்கான நிதிசேகரிப்பை மேற்கொண்டார்கள். இதன்மூலம் சுவிஸசலாந்து நாட்டில் ஊருக்கென இயங்கிய முதலாவது சங்கமாக வரலாற்றில் தனது பெயரைப் பொறித்துக்கொண்டது.

வல்வை நலன்புரிச்சங்கத்தை சுவிஸ்சலாந்து நாட்டில் உருவாக்கியவர்களாக கவிஞன்ஆறுமுகசாமி, வெங்கடாசலம் வேலுப்பிள்ளை, கந்தசாமி சிவபாதசுந்தரம், துரைலிங்கம் கந்தசாமித்துரை, தங்கராசா இரத்தினசிகாமணி, தில்லையம்பலம் இரத்தினசிகாமணி என்போர் குறிப்பிடதக்கவர்களாவர். அங்கத்தவர் தொகை சிறியதாகவும் அவர்கள் வாழும் நகரங்கள் வெவ்வேறாக காணப்பட்டதெனினும் எல்லோரையும் இணைத்தே மேற்படி சாதனைப்பயணத்தை இவர்கள் மேற்க்கொண்டார்கள்.

சுவிஸ்ஸில் வாழும் வல்வெட்டித்துறை மக்களை ஒன்றிணைத்து 03.04.2003இல் வல்வை ஒன்றியம் உருவானது. பெயரில் மாற்றம் கண்டாலும் ஏனைய நலன்புரிச்சங்களிற்கு இணையானது இச்சங்கமாகும். இச்சங்கத்தில் பின்வருவோர் ஆரம்பநிர்வாகிகளாக செயல்ப்பட்டனர் தலைவர் க.வாமனகணேஸ் செயலாளர் சி.கந்தசாமி பொருளாளர் சு.சுஜேந்திரன்

## வல்வை அன்னபூரணி நற்பணிமன்றம் நோர்வே:------

புலம்பெயர் வல்வையர்களினால் உருவாக்கப்பட்ட நலன்புரிச்சங்கங்களில் நோர்வேயில் தோன்றிய இச்சங்கமே தாய்மண்ணாம் வல்வையென்னும் பெருமையுடன் அப்பெருமைக்கு பெருமை சேர்க்கும் அடையாளத்தையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. ''அன்னபூரணி'' இமயமலைச்சிகரங்களில் ஒன்று, உணவற்றேருக்கு உணவை அள்ளிக்கொடுப்பதாக காசியிலும் காஞ்சிபுரத்திலும் இருந்து அருள்பாலிக்கும் அன்னைத்தெய்வம். இதேபோல் வல்வெட்டித்துறையின் வேப்பமரங்களினால் கட்டப்பட்ட ''அன்னபூரணி'' என்றகப்பலின் பெயரும் எமது மண்ணிற்கு பெருமையை அள்ளிக்கொடுக்கும் தாயாகவே விளங்குகின்றது. அத்திலாந்திக்கடல் கடந்து அமெரிக்கா வரைவந்த இக்கப்பலின் பெயரில் நற்பணிமன்றம் அமைத்து ஊரின் தேவைகளை தீர்கமுற்பட்டனர் நோர்வேவாழ் வல்வையர்கள்.

01.05.2006இல் ஈழத்தமிழரின் மறக்கமுடியாத நகராகவிளங்கும் நோர்வேயின் oslo வில் ஒன்று கூடிய வல்வெட்டித்துறை மக்களினால் ஊருக்கான இத்திருப்பணி ''வல்வை அன்னபூரணி நற்பணிமன்றம்'' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டது. ஆரம்முயற்சியாக ஒருகுடும்பத்தினரிடமிருந்து வருடத்திற்கு 600குறோனை நிதியைப்பெற்று ஊருக்கு அனுப்புவதென்னும் தீர்மானமும் அன்றே ஏகமனதாக அவர்களால் நிறைவேற்றப்பட்டது

நோர்வேயில் வாழும் வல்வைமக்களின் தொகை 60 குடும்பங்களென மதிப்பிடப்படுகின்றது. இவர்களும் வெவ்வேறு நகரங்களில் வல்வை என்ற முகமிழந்து வாழ்ந்து வந்தனர். ''நற்பணிமன்றம்'' என இவர்கள் தெரிந்தெடுத்த பெயர் ''நலன்புரிச்சங்கம''என்ற பெயருக்கு இணையானதெனினும் ஏனைய சங்கங்களில் இருந்து இப்பெயர் தனித்துவமாக காணப்படுகின்றது. இப்பெயரில் நோர்வேவாழ் வல்வை மக்கள்அனைவரும் ஒன்றிணைககப்பட்டுள்ளனர். இத்தகைய சங்கத்தை உருவாக்கியவர்களாக கபில்ராஜ் அருமைச்சந்திரலிங்கம், கலைராசன் சிங்காரவடிலே, சூரியமூர்த்தி சுப்பிரமணியம், இரத்தினவேல் பாலசுப்பிரமணியம், மகேசன் இரத்தினவடிவேல், தங்கவடிவேல் கந்தசாமி, ரிச்சேர்ட் நிக்சன், சிவலிங்கம் சிவானந்தராஜா, சிவநடேஸ் செல்வராசா, புவிராஜ் சிறிஸ்கந்தராஜா மற்றும் இவர்களுடன் இணைந்து செயலாற்றிய அனைவரும் என்றும போற்றுதற்க்குரியவர்கள்..

## வல்வை ஒன்றியம் ஜேர்மனி:-----

தாய்நிலவல்வைக்கு நலன்புரியவென புலம்பெயர் மண்ணில் அமைக்கப்பட்ட சங்களின் வரிசையில் இறுதியாக இணைந்து கொண்டிருப்பது ஜேர்மனியில் உருவாகி இருக்கும் வல்வை ஒன்றியமாகும். ஈழத்தமிழரின் புலம்பெயர் வாழ்கைக்கு கால்கோளிட்ட பெருமை ஜேர்மன் நாட்டிற்கே உண்டு. 1970களின் இறுதியில் ஆரம்பித்த இத்தகைய புலப்பெயர்வில் வல்வைமக்கள் மிகச்சிறியஅளவே இங்கு குடியேறினர். இன்று ஏறத்தாள 75வல்வைக் குடும்பங்கள்வரை இங்கு வாழ்கின்றனர். நாட்டின் பலபாகங்களிலும் பரந்துவாழும் இவர்களை ஒன்றிணைப்பது கடினமானபணியாகும். சிறப்பான இப்பணியினை ஊரின் வேட்கையினால் செய்து முடித்திருக்கும் இவர்களின் பணிபாராட்டுக்குரியது.

26.12.2009இல் ஜேர்மன் நாட்டின் மத்தியில் அமைந்திருக்கும் Dortmund நகரத்தில் ஒன்றுகூடிய வல்வைமக்களினால் இப்புனிதப்பணி செயலாக்கப்பட்டுள்ளது. மேற்படி ஜேர்மன் வாழ்வல்வைமக்களின் நம்பிக்கைக்குரிய முதலாவது செயற்குழு உறுப்பினாகளாக தலைவர் சித்திவிநாயகம் பரமகுரு, உபதலைவர் சிவஆனந்தன் விவேகானந்தர், செயலாளர் பத்மநாதன் துரைசாமி, பொருளாளர் தயாநிதி யோகேந்திரன் என்போர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## வல்வை ஒன்றியம் வல்வெட்டித்துறை

வல்வை நலன்புரிச்சங்கங்கள் வழியாக புலம்பெயர் வல்வெட்டித்துறை மக்களை இணைத்து ஊரிற்கான உதவிப்பணிகள் முன்கூறியவாறு முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் 20ம் நூற்றாண்டு முடிந்து 21ம் நூற்றாண்டில் உலகம் காலடி எடுத்து வைத்திருந்தது. இலங்கையிலும் யுத்தமேகங்கள் மறைந்து சமாதானகாலம் போல் ஆங்காங்கே ஒளிக்கீற்றுகள் தென்பட்டிருந்தன. இக்காலகட்டத்தில் 9.2.2003இல் வல்வை மக்களின் நலன்பேணும் சங்கங்களின் வரிசையில் வல்வெட்டித்துறை''வல்வைஒன்றியம்'' தனது பாதங்களைப்பதிந்து கொண்டது.

''எல்லாப்பாதைகளும் ரோமாபுரிக்கே'' என்பதிற்கிணங்க புலம்பெயர் நாடுகளில் இயங்கும் அனைத்து நலன்புரிச்சங்கங்களின் செயற்பாடுகளும் இறுதியில் வல்வெட்டித்துறையிலே சங்கமிக்கின்றன. அவ்வகையில் அனைத்து நலன்புரிச்சங்கங்களுடனும் ஒனறிணைந்து செயல்புரிய ஆரம்பிக்கப்பட்ட சங்கத்திற்கு ''வல்வை ஒன்றியம்'' என்னும் பெயர் மிகவும் பொருத்தமானதாக அமைந்தது. 1995ம்ஆண்டில் ''வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு'' தனது செயற்பாடுகளை இழந்து எட்டுஆண்டுகளின் பின் வல்வை ஒன்றியம் பெருத்த எதிாபார்ப்புடன் உருவாகியிருந்தது. இதனை உருவாக்கிய பெருமை முன்னாள் அதிபர் சரவணப்பெருமாள் சத்தியமூர்த்தி அவர்களையே சாரும். 22.1.3003இல் மேற்படி ஒன்றியம் ஆரம்பிப்பதற்கான பொதுக்கூட்ட அழைப்பை ஊர்மக்களிற்கு இவர் வழங்கியிருந்தார். தொடர்ந்து 09.02.2003 ஆண்டு வல்வெட்டித்துறை அமெரிக்கமிஷன் பாடசாலையில் கூடிய பொதுக்கூட்டத்தின் முன்னிலையில் வல்வையின் நலன்பேணும் ''வல்வை ஒன்றியம்'' இவரால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதை தொடர்ந்து பொதுச்சபையிடம் வல்வை ஒன்றியத்தை இவர் கையளித்தார். இதனைத்தொடர்ந்து 09.03.2003இல் கூடிய கூட்டத்தில் ஒன்றியத்தின் முதலாவது நிர்வாகசபை உறுப்பினர்களாக தலைவர் ந.சிவஞானசுந்தரம், உபதலைவர் செ.யோகச்சந்திரன், செயலாளர் து.சேகர், உபசெயலாளர் இ.யோகச்சந்திரன் பொருளாளர் வை.ஜெயச்சந்திரன் உபபொருளாளராக திருமதி. மேரி நிர்மலா அர்சுனா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர், போஷகர்களாக ஒன்றியத்தின் ஸ்தாபகர் திரு,சரவணப்பெருமாள் சத்தியமூர்த்தி மற்றும் அந்நாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு,கனகலிங்கம் சிவாஜிலிங்கம் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## வல்வைக்கான இணையத்தளம்(valvai.com)

ஒவ்வொரு நாடுகளிலும் வாழும் வல்வையர்களை இணைத்து நடைபோடுவது வல்வை நலன்புரிச்சங்கங்கள் ஆகும். அவ்வழியில் அனைத்து நாடுகளிலும் வாழும் வல்வையர்களிற்காக 16.01.2010இல் வெளித்தெரிய உருவாக்கப்பட்டதே valvai.com. எனினும் இப்பெயர் பத்து வருடங்களுக்கு மேலாக அடைகாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. உலகின் பல நாடுகளிலும் சிதறிவாழும் வல்வையர்களை ஒரேநேரத்தில் இணைக்கக்கூடியது இவ்விணையத்தளம். ஒருபுறம் பகலாகவும் மறுபுறம் இரவாகவும் உலகம் காணப்பட கணனித்திரைகளோ ஏககாலத்தில் உலகம் முழுக்க விரியும் தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. அதனால்தான் இதுகணனியுகம் எனப்பெயர்பெற்றது. இக்கணனி ஊடாக அனைத்து வல்வையர்களையும் இணைத்து ஊரின் எதிர்கால நலனுக்காக செயலாற்றுவதே valvai.com இன் நோக்கமாகும்.

valvai.com இது சங்கமல்ல. இது செய்திகளை காவிச்செல்லும் ஒருஊடகம். பெயரிற்கேற்ப இதன் நோக்கமெல்லாம் வல்வை...... வல்வை...... வல்வை...... என்றேயாகும். வல்வையின் நலன் தவிர்ந்த வேறு செய்திகள் இவ்விணையத்தில் வெளிக்கொணரப்படமாட்டாது. வல்வையர்கள் இணைந்த செய்தியானாலும் வல்வையரின் நலன்கள் பாதிக்கப்படலாம் எனக்கருதப்பட்டால அச்செய்தியை valvai.com உடனே நிராகரிக்கும், ஏனெனில் இது வல்வையரின் செய்திக்காக அன்றி வல்வையரின் நலனுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டது, இவ்விணையச்சேவையில் வெளிக்கொணரப்படும் செய்திகளினால் எந்த தனிநபர்களிற்கும் எவ்விதபாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இது மிகக்கவனமாக இயங்கும். வல்வை மக்களினால் வல்வெட்டித்துறையின் அபிவருத்திதிட்டங்களிற்கு வழங்கப்படும் நிதிகளையோ அல்லது வேறு எவ்வித சந்தாப்பணங்களையோ valvai.com ஏற்றுக்கொள்ளாமலே தனது பணியினைத்தொடரும்.

''யாதும்ஊரே யாவரும்கேளிர் வல்வையர்யாவரும் எம்மவராவீர்'' என்பதை நோக்கமாகக் கொண்டு இச்செய்திச்சேவை தனது பயணத்தை தொடர்ந்துள்ளது. இதன் செயற்பாட்டாளர்கள் குறித்த ஒரு நகரத்தை அல்லது நாட்டினை அடிப்படையாகக் கொண்டியங்காமல் வல்வெட்டித்துறை என்ற நகரத்தை நோக்கமாக கொண்டே எப்போதும் இயங்குவார்கள். உலகின் எப்பகுதியில் வாழும் வல்வையர்களுடனும் இதன் தொடர்புகள் பேணப்படும். ஏனெனில் சர்வதேசமும் வியாபித்திருக்கும் வல்வையர்கானது valvai.com ஆகும்.

## வல்வையின் அபிவிருத்திக்கான செயற்குழு (VDAG)

valvai development action group இது வல்வெட்டித்துறை அபிவிருத்திக்கான செயற்குழு என தமிழ்ப்படுத்தப்படும். ஆனால் இது ஒரு குழுவைமாத்திரம் குறிப்பதல்ல. வல்வெட்டித்துறையின் தேவைகளையும் அபிவிருத்தி நோக்கிய செயற்பாடுகளையும் புலம்பெயர் மக்கள்

முன்னெடுக்கும்போது அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழுக்களின் செயற்பாடாகவே கருதப்படும். இதன்படி ஊருக்கான ஒவ்வொரு திட்டத்தின் செயற்பாட்டிலும் அதனைச்செய்ய முன்வரும் சங்கங்கள் அல்லது நபர்கள் மாற்றமடையும்போது குழுக்களும் மாற்றமடைகின்றன. இவ்வாறு மாற்றமடைந்தாலும் அவர்களின் நோக்கம் வல்வெட்டித்துறையின் அபிவிருத்தியை சுட்டியதாக இருப்பதால் அவர்கள் ஒவ்வொருவரும் வல்வெட்டித்துறையின் அபிவிருத்திக்கான செயற்படுகுழுவாகவே கணிக்கப்படுகின்றனர். இங்கு செய்கின்ற காலம் முக்கியமல்ல செயல்தான் முக்கியப்படுத்தப்படுகின்றது. அதனால்தான் இது செயற்குழுவாகின்றது.

வல்வெட்டித்துறையில் பிறந்தவர் எல்லோரும் வல்வையர் என சொல்லிக்கொள்ளலாம். ஆனால் வல்வையின் அபிவிருத்திப்பணிகளில் இணைந்து செயல்படுவோர் மட்டுமே VDAG என்னும் செயற்குழுவாக இனம்காணப்படுவர். வல்வெட்டித்துறையின் அபிவிருத்திக்கான பணிகளில் முன்பு இயங்கியவர்களை மட்டுமல்ல இனிமேல் இயங்குபவர்களையும் இப்பெயர் அடையாளப்படுத்தும்.

VDAG என்பது மேற்கூறியவாறே தனது பெயரைப்பெற்றது. தாயகத்தின் தேவைகளும் புலம்பெயர் வழங்குநர்களும் மாற்றத்திற்கு ஆட்பட்டவர்களாகவே எப்போதும் இருப்பர். இது நடைமுறை அனுபவங்களினூடானது.. ஆனால் தேவைகளை இனங்காட்டுவதிலும் பூர்தியாக்கப்பட்ட செயல்திட்டங்களை பகிரங்கப்படுத்துவதையுமே மாற்றமில்லாத கடமையாக valvai.com இங்கு மேற்கொள்ள விரும்புகின்றது.

''யாதும்ஊரே யாவரும் கேளிர் வல்வையர் யாவரும் எம்மவராவீர்''

குறிப்பு:---இங்கு பதிவிற்குள்ளாக்கப்பட்டவைகள் யாவுமே தனித்தனி கட்டுரைகளாக விரிவாக்கம் பெறவேண்டியவை. இக்கட்டுரையின் விரிவஞ்சி சங்கங்களின் தொடக்ககால வரலாறே இங்கு முழுமையான கட்டுரையாக்கப்பட்டுள்ளது.